[2010 ஜனவரி 11

2. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. சிவராஜ், பொதுக் கணக்குக் குழுவின் தலைவர்.

திரு. சு. சிவராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2009-2010 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவினுடைய 178 முதல் 184 வரையிலான ஏழு அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.*

(ஆ) பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திருமதி டி. யசோதா, பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர்.

திருமதி டி. யசோதா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2009-2010 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவினுடைய 133 முதல் 137 வரையிலான ஐந்து அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.*

(இ) அரசு உறுதிமொழிக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ், அரசு உறுதிமொழிக் குழுவின் தலைவர்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2009-2010 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவினுடைய 133-வது அறிக்கையினைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.*